மே - 21

**"வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத்தகுதியுள்ளவனாகவும், இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. - 2 தீமோ 3 : 16, 17.**

தேவனண்டைக்குச் சமீபமாகச் சேரவும், பரிசுத்தமையவும் நமக்கு உதவியிருக்கிற எல்லா ஆவியின் குணசீலங்களும் நாம் ஏற்கனவே அடைந்திருக்கிற தெய்வீக காரியங்களின் எல்லா அறிவு வளர்ச்சியும் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டின் மூலமாகவும், நமது கர்த்தரின் வார்த்தைகள் மூலமாயும் நமக்கு அவருடைய ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் மூலமாயும் வந்திருக்கின்றன. வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற இரட்சிப்புக்காக நம்மை ஆயத்தம் பண்ணும் அந்த மெய்யான ஞானத்திற்காக மற்ற வழிகளுக்குச் செல்ல ஒரு போதும் அவசியமுமிருக்காது. **- Z ’97, 170 (R 2165).**

வேத வாக்கியங்கள் தேவனால் புகட்டப்பட்டவைகள், ஆகையால், உண்மை என்று தேவனுடைய மனுஷன் எதை நம்ப வேண்டும் என்றும், வஞ்சம் என்று அவன் எதைத் தள்ளிவிட வேண்டும் என்றும், தன்னுடைய குணத்திலிருந்து அவன் எதைப் புறம்பே கழித்துப்போட வேண்டும் என்றும், குண அபிவிருத்திக்காக அவன் அதை அப்பியாசிக்க வேண்டும். அவனுக்கு அவைகள் போதுமான தெய்வீகக் கருத்தைக் கொண்டதாக இருக்கின்றன, அப்படியே, தன்னுடைய இருதயத்தையும் மனதையும் அவைகளின் செல்வாக்குக்கு உட்படுத்தி, பாவத்திலிருந்தும், வஞ்சகத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும், உலகத்தனத்திலிருந்தும் அவன் சுத்திகரிக்கப்படுகிறான். அதோடு, அதன் மூலமாக அவன் எல்லா நல்வார்த்தையிலும் சுபாவத்திலும் முற்றிலுமாக விருத்தியாக்கப்படுகிறான். அதனால், அவன் எல்லா நற்கிரியைக்காகவும், முற்றிலும் தயாராக இருக்கிறான். **- P '26, 64.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

உபா 6:6,7; 2சாமு 23:2; லூக் 1:70; மத் 22:43; 26:54,56; யோவா 5:39;10:35; மாற் 12:24; 2பேது 1:19-21; அப் 20:20,27; ரோம 3:2; 15:4; சங் 19:7-11; 119:9,11, 97-104; 1தீமோ 6:11; 2தீமோ 2:21,25; 4:2; எபி 3:7; 4:12;10:24; 2கொரி 9:8; எபே 2:10; தீத் 2:14.

**கோபுர வாசிப்பு : Z ’03, 186 (R 3210)**

**வினாக்கள்** : இந்த வாரத்தில் இந்த வசனத்தை நான் பயன்படுத்தினேனா? ஏன்? எது இடையூறாகயிருந்தது? அல்லது உதவியாயிருந்தது? பலன் என்ன?